பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
20 12 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடைகிறது.
- நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வு தொடர்பாக பிஜேபி, காங்கிரஸ் உறுப்பினர்கள் பரஸ்பரம் குற்றம் சாட்டி தில்லி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.
- மின் கணக்கீட்டுப் பணியை மாதம் ஒருமுறை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- ஆளும் திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.
- வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 60 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று நிறைவடைகிறது.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் தேதி தொடங்கிய குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவு பெறுகிறது.

<<<<>>>>

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற போராட்டத்தின்போது இரண்டு பிஜேபி உறுப்பினர்கள் காயமடைந்ததை அடுத்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மீது தில்லி காவல் நிலையத்தில் பிஜேபி புகார் செய்துள்ளது.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அனுராக் தாக்கூர், தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக கூறினார்.

உரிய வழியில் நாடாளுமன்றத்திற்கு செல்லுமாறு பாதுகாப்புப் படையினர் திரு. ராகுல் காந்தியை கேட்டுக்கொண்ட நிலையில் அவர், அதனை புறக்கணித்து கோபமடைந்ததாக குறிப்பிட்டார்.

இதற்கிடையே காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. திக்விஜய் சிங், பாரத ரத்னா அம்பேத்கர் சிலை அருகே போராட்டம் நடத்த தாங்கள் முடிவு செய்திருந்த நிலையில் பிஜேபி உறுப்பினர்கள் அங்கு திரண்டு அமளியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார்.

டாக்டர் அம்பேத்கருக்கு எதிராக கூறப்பட்ட கருத்துகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் இது அமைந்ததாகவும் திரு. திக்விஜய் சிங் கூறினார்.

இந்நிலையில் பிஜேபி அளித்த புகாரை அடுத்து திரு. ராகுல் காந்தி மீது தில்லி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாடாளுமன்ற வளாகத்தின் எந்தவொரு பகுதியிலும் அரசியல் கட்சியினரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காங்கிரஸ், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நேற்று நடந்த விவகாரத்தால் 2 உறுப்பினர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து, திரு. ஓம்பிர்லா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

<<<<>>>>

மின் கணக்கீட்டுப் பணியை மாதம் ஒருமுறை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடையில் விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையே உரையடிய அவர், அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தபோது இதனைத் தெரிவித்தார்.

விசைத்தறி கூடங்களுக்கான இலவச மின்சாரம் 750 யூனிட்டில் இருந்து ஆயிரம் யூனிட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது, பயனுள்ளதாக இருக்கிறதா என்பது குறித்தும் விசைத்தறி உரிமையாளர்களிடம் முதலமைச்சர் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆளும் திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆட்சிக்கு வந்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடுப்பணைகள் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கை வெளியிட்ட திமுக, தற்போது வரை ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை என்று கூறினார்.

விவசாயிகள் இரட்டிப்பு வருவாய் பெறவேண்டும் என்ற நோக்கில் தலைவாசலில் கால்நடைப் பூங்கா அமைக்கப்பட்ட நிலையில், அது அஇஅதிமுக ஆட்சியில் நிறுவப்பட்ட திட்டம் என்பதால், திமுக அரசு அதை கிடப்பில் போட்டுள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<>>>>

நெல்லை மாவட்டத்தில் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவது தொடர்பாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜேந்திரன், சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், விஜயாபதி விஸ்வாமித்ரர் கோயில், பஞ்சல் கடற்கரை பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியலில் இளம் வாக்காளர்களை அதிக அளவில் இணைக்கும் வகையில் தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற இளம் வாக்காளர்களை அதிக அளவில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம் இப்பணியை சிறப்பாக மேற்கொண்டுள்ளது என்று அவர் பாராட்டினார்.

கல்லூரி மாணவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்க்க வேண்டும் என்று திருமதி அர்ச்சனா பட்நாயக் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழ் மொழி இலக்கிய திறனறி தேர்வு முடிவுகள் இன்று காலை 11 மணியளவில் வெளியிடப்பட உள்ளதாக அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

**www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **RESULTS** என்ற தலைப்பின் மூலம் தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளலாம் என்று கூறியுள்ளது.

இத்தேர்வு மூலம் ஆயிரத்து 500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் இரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் பந்தலூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆண் காட்டு யானை ஒன்று மக்களை அச்சுறுத்தி வந்துள்ளது.

இதையடுத்து யானையை வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் முயற்சி மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

கிரீஸ் கடற்பகுதியில் படகு ஒன்று கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

வெளியுறவுச் செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி மூன்று நாள் பயணமாக இன்று மொரீஷியஸ் புறப்படுகிறார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் தடை செய்யப்பட்ட தீவிரவாத குழுக்களைச் சேர்ந்த 18 பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

<<<<>>>>

நெல்லை மாவட்டம் கல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் மருத்துவக் கழிவுகளைக் கொட்டிய சம்பவம் தொடர்பாக 2 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

<<<<>>>>

மேட்டூர் அனல் நிலையத்தில் நிலக்கரி சேமிப்புத் தொட்டி சரிந்து விழுந்த விபத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 2 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று காலை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானிய விலையில் பவர் டில்லர் களையெடுக்கும் கருவியை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திரு. இளம் பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டப் பகுதியில் இருந்து வெளியேறி கிராமங்களில் சுற்றித்திரிந்த 30க்கும் மேற்பட்ட யானைகள் மீண்டும் வனப்பகுதிக்கு விரட்டப்பட்டன.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் திம்மசமுத்திரம் பகுதியில் கடத்த முயன்ற ஆயிரத்து 500 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாமில் பெறப்பட்ட படிவங்களை அம்மாவட்டத்திற்கான வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திரு. அனில் மிஷ்ரம் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் 100 கிலோ கஞ்சா செடியை வைத்திருந்த இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 60 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை வென்றது.

மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 217 ரன் எடுத்தது.

ஸ்மிரிதி மந்தனா 47 பந்துகளில் 77 ரன்னும், ரிச்சா கோஷ் 21 பந்துகளில் 54 ரன்னும் எடுத்தனர்.

218 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி, 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 157 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சாளர் ராதா யாதவ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியில் இந்திய அணியின் ரிச்சா கோஷ், 18 பந்துகளில் 50 ரன் எடுத்ததன் மூலம் மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டியில் விரைவாக அரை சதம் எடுத்த உலக சாதனையை சமன் செய்தார்.

அத்துடன் மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டியில் அதிக ரன் எடுத்த சாதனையையும் இந்தியா படைத்தது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் உத்தரப்பிரதேச அணி 59-23 என்ற புள்ளிக் கணக்கில் குஜராத்தையும், மும்பை அணி 43-37 என்ற புள்ளிக் கணக்கில் பட்னாவையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் ஜெய்ப்பூர் - பெங்கால் அணியையும், புனே – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>